

# ஏமனில் அமெரிக்கா தாக்குதல் குழந்தைகள் உள்பட 20 பேர் பலி

# சுனிதா வில்லியம்ஸ் மீட்பு பூமிக்கு திரும்புவதில் தாமதம்





# தமிழர்களுக்கு தமிழகத்தில் தேர்வு மையம் அமைக்க வேண்டும்- சீமான்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 16-3-2025 ஞாயிற்றுக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்




# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் பங்குனி 2 | ஹிஜ்ரி 1446 ரமலான் 15

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 16, 2025● வெளியீடு: 17-3-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 240 ● 8 பக்கம் ● ரூ.6




## ஹவுதிகளை எதிர்த்து

# ஏமனில் அமெரிக்கா கொடூர தாக்குதல்

## குழந்தைகள் உள்பட 20 பேர் உயிரிழப்பு



**அமெரிக்கா, மார்ச் 16-**
அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்ற பிறகு, ஏமனில் உள்ள ஹவுதிகளுக்கு எதிராக நடத்திய முதல் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர் என்று கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஹவுதி அமைப்புக்கு வழங்கி வரும் ஆதரவை நிறுத்துமாறு ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்த நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னதாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போரின் போது, ஹவுதி அமைப்பினர் இஸ்ரேல் மற்றும் செங்கடல் கடலோர பகுதிகளில் தாக்குதல் நடத்தி வந்தது.

இஸ்ரேலுக்கு எதிரான செயல்களை கண்டித்து அமெரிக்கா நடத்திய இந்த தாக்குதலில் உயிரிழந்த 20 பேரில் குழந்தைகளும் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து ஏ.எஃப்.பி. புகைப்பட கலைஞர் வெளியிட்ட தகவல்களில் ஏமனின் தலைநகர் சனாவில் மூன்றுமுறை அதிபயங்கர வெடி சத்தம் கேட்டதாகவும், குடியிருப்பு பகுதிகளில் கரும்புகைகள் வெளியேறியதாகவும் தெரிவித்தார்.

இதேபோல் ஏமனின் வடக்கு பகுதியான சதா பகுதியிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. அமெரிக்காவின் மத்திய கமாண்ட் வெளியிட்ட பதிவுகளில், விமானத்தில் வீரர்கள் ஏறுவதும், வான்வெளியில் இருந்து அவர்கள் நடத்திய தாக்குதலில் கட்டிடம் ஒன்று இடிந்து விழுவது தொடர்பான புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

## சுனிதா வில்லியம்ஸ் மீட்பு விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது



**சென்னை, மார்ச் 16-**
சர்வதேச விண்வெளி மையத்துக்கு கடந்த ஆண்டு ஜூன் 5ந்தேதி இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் சென்றனர். அவர்கள் 10 நாட்கள் ஆய்வுக்கு பிறகு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்த நிலையில் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு பூமிக்கு திரும்ப முடியவில்லை.

இதையடுத்து இருவரையும் மீட்டு கொண்டு வர ஸ்பெஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று அதிகாலை பால்கன்9 ராக்கெட்டில் டிராகன் விண்கலம் ஏவப்பட்டது. இதில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆனி மெக்கிளைன், நிக்கோலி அயர்ஸ், ஜப்பான் விண்வெளி வீரர் டகுயா ஒனிஸி, ரஷிய விண்வெளி வீரர் கிரிஸ் பெஸ்கோவ் ஆகியோர் சென்றனர். இந்த விண்கலம் இன்று காலை சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. அதில் இருந்து விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குள் சென்றனர். அவர்களை அங்கிருக்கும் வீரர்கள் வரவேற்றனர். வருகிற 19ந்தேதி சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர், நிக் ஹேக் மற்றும் ரஷியாவை சேர்ந்த அலெக்சாண்டர் ஆகியோர் டிராகன் விண்கலத்தில் பூமிக்கு திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்வெளியில் சிக்கி தவித்த சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் 9 மாதங்களுக்கு பிறகு பூமிக்கு திரும்ப உள்ளனர். அதேவேளையில் வானிலை இடையூறு ஏதாவது ஏற்பட்டால் அவர்கள் பூமிக்கு திரும்புவதில் தாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# தமிழகத் தேர்வர்களுக்கு தமிழ்நாட்டிலேயே தேர்வு மையங்கள் அமைக்க வேண்டும்

## சீமான் பேச்சு



**சென்னை, மார்ச் 16-**
நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தொடர்வண்டித் துறை தேர்வெழுத தமிழ்நாட்டிலிருந்து விண்ணப்பித்திருந்த தேர்வர்களுக்கு வேற்று மாநிலங்களில் தேர்வு மையங்களை ஒதுக்கியிருக்கும் தொடர்வண்டித்துறை பணியாளர் தேர்வு வாரியத்தின் செயல் வன்மையானது கண்டனத்திற்குரியது. இது முழுக்க முழுக்க, இந்திய ஒன்றிய அரசின் பணிகளுக்கு தமிழ்நாட்டு இளைஞர்கள் தேர்வாகி விடக்கூடாது என்ற திட்டமிட்ட தொடர் நடவடிக்கைகளின் நீட்சியேயாகும்.

தென்னக தொடர்வண்டித் துறையில் காலியாகவுள்ள 493 லோகோ பைலட் பணியிடங்களுக்கான இரண்டாம் கட்ட தேர்வு வருகின்ற 19.03.25 அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்காக, தமிழ்நாட்டிலிருந்து விண்ணப்பித்த தேர்வர்களுக்கு தெலுங்கானாவில் தேர்வு மையங்களை ஒதுக்கி, நுழைவுச் சீட்டினை அனுப்பி இருப்பது தேர்வர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

முதற்கட்டத் தேர்வுக்கு அருகாமை யிலேயே தேர்வு மையங்களை அமைத்துக்கொடுத்த தேர்வாணையம் இரண்டாம் கட்ட தேர்விற்கு 1000 கி.மீ.க்கு அப்பால் தெலுங்கானா மாநிலத்தில் தேர்வு மையங்களை ஒதுக்கியுள்ளது.

தேர்வு மையம் குறித்து நான்கு நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்படும் என்ற நிலையில், வேறு மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் அமைந்துள்ள தேர்வு மையத்தினை தமிழகத் தேர்வர்கள் கண்டறிவதில் மிகப்பெரிய நடைமுறை சிக்கல் உள்ளது. எனவே, இது தமிழகத் தேர்வர்களிடம் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தி, உளவியலாக அவர்களைச் சிதைத்துத் தோல்வியுறச் செய்வதற்கும், தமிழகத் தேர்வர்களைத் தேர்வு எழுத விடாமலேயே போட்டியிலிருந்து வெளியேற்றுவதற்குமென செய்யப்படும் சூழ்ச்சியேயாகும். இந்திய ஒன்றியத்திற்கு அதிக வருவாயை ஈட்டித்தருவதில் முன்னணி மாநிலமாகத் திகழ்கின்ற தமிழ்நாட்டில் போதிய அளவில் தேர்வு மையங்களை அமைக்காதது ஏன்?

கடந்த 2019 ஆம் ஆண்டு தொடர்வண்டித் துறையின் முதல்நிலை தேர்விலும் இதேபோன்று வேற்று மாநிலங்களில் தேர்வு மையங்களை அமைத்து அறிவிப்பு வெளியானபோதும், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தவுடன் உடனடியாக அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த திமுக அது குறித்து உடனடியாகக் கேள்வி எழுப்பிய நிலையில், திமுக ஆட்சி அமைந்த பிறகு 2022 ஆம் ஆண்டு மற்றும் தற்போதும் தேர்வு மையங்கள் வேற்று மாநிலத்தில் அமைக்கப்படுவதை வாய்மூடி வேடிக்கைப்பார்ப்பது ஏன்? தமிழ்நாட்டில் தேர்வு மையங்களை அமைக்க அரசு சார்பாக என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டது? என்பதை திமுக அரசு விளக்க வேண்டும். ஆகவே, இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு தொடர்வண்டித்துறை தேர்வு எழுதும் தமிழகத் தேர்வர்கள் தமிழ்நாட்டிலேயே தேர்வு எழுதும் வகையில் தேர்வு மையங்களை உடனடியாக மாற்றி அமைத்துதர தொடர்வண்டித்துறைக்கு உத்தரவிட வேண்டுமெனவும், அதுவரை தொடர்வண்டித்துறை இரண்டாம் கட்டத் தேர்வினை தள்ளிவைக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.






E-mail:maalaiexpresspdy@gmail.com
• ஞயிறு • மார்ச் 16, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மலைவாழ் பழங்குடியின மக்களிடம் கலந்துரையாடிய ஆட்சியர்



**கன்னியாகுமரி, மார்ச் 16–**

கன்னியாகுமரி மாவட்ட திருவட்டார் வட்டம் பேச்சிப்பாறை ஊராட்சி படுபாறை, வலியமலை, மற்றும் பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட புறாவிளை மலைப்பகுதியில் மலைவாழ் பழங்குடியின மக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் சந்தித்து, கலந்துரையாடி தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் நலத்திட்ட உதவிகளும் கடைகோடி மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களுக்கு வன உரிமை பட்டா வழங்குவது தொடர்பாக அந்தப் பகுதி மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து, அதற்கு தீர்வுகாணும் வகையில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வன உரிமை சட்டத்தின் கீழ் நில உரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மலைவாழ் மக்களுக்கு தேவையான பேருந்துவசதி, மின்சாரவசதி, மருத்துவகாப்பீடு, முதியோர்உதவித்தொகை, குடும்ப அட்டை, சாதிசான்றிதழ் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் உங்களுக்கு வழங்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து முகாம்கள் நடத்தி உங்களின் தேவைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் இப்பகுதி மக்களுக்கு அதிகமான அளவில் கான்கீரிட் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

தொடர்ந்து தொடர்ந்து மோதிரமலை குற்றியாறு வனப்பகுதிக்குள் கி.மீ 0ஃ4ல் ஏற்கனவே அமைந்துள்ள தரைப்பாலம் 31.45 மீட்டர் நீளமுடையது. இந்த தரைபாலம் முற்றிலும் சேதமடைந்துவிட்டதாலும் மழைக்காலங்களில் வெள்ளம் வடிய ஒருவார காலத்திற்கு மேல் ஆவதாலும் இதனால் இப்பகுதி மக்களுக்கு வேறுமாற்றுப்பாதை இல்லாததாலும் இத்தரைப்பாலத்தினை 16.6 மீட்டர் நீளத்தில் மூன்று கண்கள் கொண்ட உயர்மட்டபாலமாக மாற்ற ரூ.5 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மாங்காமலை குக்கிராமத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் 3 வீடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விரைவில் பயனாளிகள் கட்டுமான பணிகளை முடிக்க தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கதுறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து கன்னியாகுமரியின் முதல் பல்லுயிர் பாதுகாப்பு மையம் கீரிப்பாறை பகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார்மீனா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மோகனா, நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் சத்தியமூர்த்தி, ஆதிதிராவிடர் நலதனி வட்டாட்சியர் திருவாழி, திருவட்டார் வட்டாட்சியர் கந்தசாமி, வனசரகர்கள் முருகேசன் (வேளிமலை), விஜயகுமார் (குலசேகரம்), திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்பிரமணி, வனத்துறை அலுவலர்கள், வன உரிமைச் சட்ட கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ரேணுகாதேவி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை




மதுரை வில்லாபுரம் பராசக்தி நகர் காவேரி 2வது தெருவில் நிறுவப்பட்டுள்ள சௌராஷ்டிரா பிராமண பாரம்பரிய குலதெய்வமான ஸ்ரீ ரேணுகாதேவி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. நடைபெற உள்ள கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு முதல் கால மற்றும் இரண்டாம் கால யாகசாலை பூஜை வேத மந்திரங்கள் முழங்க நிர்வாகஸ்தர்கள் கிருஷ்ணமூர்த்தி, சுரேஷ்பாபு, வினோத்குமார் உட்பட விழா குழுவினர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது.

# கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் திரவக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



**நெல்லை, மார்ச் 16–**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகராட்சி, சேரன்மகாதேவி வட்டங்களில் நீர்நிலைகள் கழிவுநீர் கலப்பதை தடுப்பு பணிகள் முன்னேற்றம் குறித்தும், வி.கே.புரம் நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் திரவக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

வி.கே.புரம் நகராட்சி பகுதியிலிருந்து திருநெல்வேலி மாநகராட்சி எல்லை வரை சில இடங்களில் கழிவுநீர் நேரடியாக நீர்நிலைகளில் கலப்பது தடுப்பதற்காக பல்வேறு பணிகள் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகளை விரைவுப்படுத்தவும், தமிழ்நாடு அரசு விதித்துள்ள வழிமுறைகளை முறையாக பின்பற்றி அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்பது குறித்தும் ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. பணிகளை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக முடிக்கவேண்டுமென துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, வி.கே.புரம் நகராட்சி கட்டபொம்மன் காலனி பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், கசவன் ஓடையிலிருந்து நீர் நிலைகளில் கழிவுநீர் கலக்கிறதா என்பது குறித்தும், தடுப்பது குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாகவும், கல்லிடைக்குறிச்சி வீரப்பப்புரம் பகுதியில் திரவ கழிவு மேலாண்மை திட்டபணிகள் குறித்தும், சேரன்மகாதேவியில் காட்டுநாயக்கர்கோவில் பின்புறம் கன்னடியான் கால்வாயில் கழிவுநீர் கலக்கிறதா என்பது குறித்தும், தடுப்பது குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வில், வி.கே.புரம் நகராட்சி ஆணையாளர் மகேஸ்வரன், அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் செல்வராஜ், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணைத்தலைவர் இசக்கிபாண்டியன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் தங்கராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

# புதுக்குப்பம் கிராமத்தில் ரூ.8.27 லட்சம் செலவில் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி சபாநாயகர் செல்வம் தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி, மார்ச் 16–**

மணவெளி சட்டமன்றத் தொகுதி, புதுக்குப்பம் கிராமத்தில் மாரியம்மன் கோயில் வீதியில் ரூ. 8.27 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியினை சட்டப்பேரவை தலைவர் செல்வம் தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி அரசு பொதுப்பணித்துறை கட்டிட மற்றும் சாலைகள் தெற்கு கோட்டம் மூலம் மணவெளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுக்குப்பம் கிராமம் மாரியம்மன் கோயில் வீதியில் ரூ.8.27 லட்சம் திட்ட மதிப்பீட்டில் கடற்கரை சாலை வரை இருபுறமும் 'லி' வடிவ வடிகால் அமைக்கும் பணியினை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவைத் தலைவருமான செல்வம், இன்று நடைபெற்ற பூமி பூஜையில் கலந்து கொண்டு வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் கோபி, இளநிலை பொறியாளர்கள் நடராஜன், ஹேமச்சந்திரன் மற்றும் புதுக்குப்பம் மீனவ கிராம பஞ்சாயத்தார் இளைஞர்கள், அப்பகுதி பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# 100 அடி ரயில்வே சுரங்கப்பாதை மக்கள் பயன்பாட்டுக்கு முதலமைச்சர் அர்ப்பணிப்பு



**புதுச்சேரி, மார்ச் 16–**

புதுச்சேரி அரசு பொதுப்பணித்துறை மூலம் புதுச்சேரி 100 அடி ரோடு ரயில்வே மேம்பாலத்தின் ரயில் இருப்பு பாதைக்கு கீழ் இருசக்கர வாகனம் செல்லும் வகையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி, தலைமை தாங்கி சுரங்க பாதையை திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

மேலும், இந்த நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், முதலியார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் சம்பத், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், கண்காணிப்பு பொறியாளர் வீரசெல்வம், செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர் ஆறுமுகம், இளநிலை பொறியாளர் கோபிநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 154 மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணம் வழங்கிய ஆட்சியர்




**கடலூர், மார்ச் 16–**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்திற்குட்பட்ட டேனிஷ் மிஷன் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், என்.எல்.சி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் பிரசன்ன குமார் மோட்டுப்பள்ளி முன்னிலையில் என்.எல்.சி. சமூக பொறுப்புணர்வு நிதியின் வாயிலாக அலிம்கோ மூலம் 154 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு 240 உதவி உபகரணங்கள் ரூ.55,45,772 மதிப்பீட்டில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை வகுத்து மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. கடைகோடியில் பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் அரசின் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் சென்றடையும் வகையில் உரிமை திட்டத்தின் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் சமூக தரவுகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 39,838 நபர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் மாவட்ட அலகிலும், உட்கோட்டம் அலகிலும், வட்டார அலகிலும் மையங்கள் அமைத்து செயல்படுத்தப்பட உள்ளது.

கடந்த 4 அண்டுகளில் கடலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக பல்வேறு திட்டங்களின் மூலம் 11,632 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 34.2 கோடி மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் அலிம்கோ நிறுவனத்தின் மூலம் என்.எல்.சி. சமூக பொறுப்புணர்வு நிதியின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கிட மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து 2024–25ஆம் நிதியாண்டிற்கு கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, (நெய்வேலி) வேப்பங்குறிச்சி ஆகிய மூன்று இடங்களில் மதிப்பீட்டு குழுவால் முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாம்களில் 421 மாற்றுத்திறனாளிகளுக்கு 632 உதவி உபகரணங்கள் ரூபாய் 1.51 கோடி மதிப்பீட்டில் அலீம்கோ நிறுவனத்தால் உதவி உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவற்றில் வேப்பங்குறிச்சி மற்றும் குறிஞ்சிப்பாடி முகாம்களில் மதிப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இன்றைய தினம் பண்ருட்டி பகுதியில் மதிப்பீட்டு குழுவாள் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர சைக்கிள், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, மூலை முடக்கு வாதம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சக்கர நாற்காலி, காதொலிக் கருவி, நடை உபகரணங்கள், செயற்கை கால் உள்ளிட்ட பல்வேறு வகையான 240 உதவி உபகரணங்களை 154 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 55,45,772 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அலிம்கோ மேலாளர் குப்தா, என்.எல்.சி. சமூக பொறுப்புணர்வு திட்ட செயல் இயக்குனர் மூர்த்தி, பொது மேலாளர் ஸ்ரீநிவாச பாபு, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பாபு உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அம்மாப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் ஆட்சியர் ஆய்வு

**சேலம், மார்ச் 16-**

சேலம், அம்மாப்பேட்டையில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையில் முதல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி "நிறைந்தது மனம்" நிகழ்வில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவத்துறையில் தொடர்ச்சியாக பல்வேறு மருத்துவ உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அதிநவீன வசதிகளுடன் அனைத்து விதமான மருத்துவச் சேவைகளும் கிடைக்கப்பெறும் வகையில் பொதுமக்களுக்கான உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மக்கள் மட்டுமல்லாது சுற்றியுள்ள தருமபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச்சேர்ந்தவர்களும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயர் சிகிச்சைக்காக வருகை புரிகின்றனர்.



தற்போது வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கிடைக்கும் வகையில் வட்டார மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் ழ்நாடு முதலமைச்சர் கடந்த 11.03.2024 அன்று சேலம், அம்மாப்பேட்டையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் ரூ.43.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையினை துவக்கி வைத்தார்கள்.

தற்போது இம்மருத்துவமனையில் நாள்தோறும் சுமார் 200 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 1,000 இரத்த பரிசோதனைகள், 415 சிறு அறுவை சிகிச்சைகள், 225 ஈசிஜி பரிசோதனைகள், 223 ஸ்கேன் பரிசோதனைகள், 200 எக்ஸ்ரே, 415 நெபுலைசேசன் எனப்படும் சுவாச சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று உள்நோயாளி பிரிவும், சிறுநீரக நோயாளிகளுக்கான ரத்த சுத்திகரிப்பு (பிமீனீஷ்பீவீணீறீஹ்உவீஉ) சிகிச்சை பிரிவும் செயல்பட்டு வருகிறது. இதுவரை 75 பேருக்கு சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் சிறுநீரக நோயாளிகளுக்கேற்ற சிறப்பு உணவும் அளிக்கப்படுகிறது.

குறிப்பாக, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கடந்த 10.03.2025 முதல் இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது. இதில் முதல் அறுவை சிகிச்சையாக பெருமாள் என்பவருக்கு குடலிறக்க அறுவை சிகிச்சை சிறந்த முறையில் இங்குள்ள மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டதையொட்டி, அந்நபரிடம் நேரில் சென்று நலம் விசாரிக்கப்பட்டது. தற்போது அவர் பூரண குணமடைந்து விரைவில் தனது இயல்பான பணியினை மேற்கொள்ள உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் சிறப்பாக இம்மருத்துவமனையில் பணியாற்றி வரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, அம்மாபேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் உள்ள புறநோயாளிகள் பிரிவு மற்றும் பல்வேறு சிகிச்சை பிரிவுகளில் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வருகைதந்த பொதுமக்களிடம் மருத்துவமனையில் வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. மேலும், நோயாளிகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் போதுமான அளவு இருப்பில் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்.

அம்மாபேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெற்ற பெருமாள் தெரிவித்ததாவது: எனது பெயர் பெருமாள். நான் பழைய சூரமங்கலம் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 65 வயது ஆகிறது. பெயிண்டர் தொழில் செய்து வரும் நான் எனது மனைவி, திருமணமான இரண்டு மகன்களுடன் வசித்து வருகிறேன். தோராயமாக ஒரு தினசரி ரூ.400 முதல் ரூ.500 வரை சம்பாதித்து வருகிறேன். இது எனது அன்றாட தேவைக்கு போதுமானதாக உள்ளது. இச்சூழ்நிலையில் திடீரென அடிவயிற்றில் வலி அதிகம் ஏற்பட்டது. உடனடியாக அருகில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றேன்.

எனக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி அம்மாபேட்டையில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அம்மாபேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தேவையான உடல் பரிசோதனை மற்றும் ஸ்கேன் செய்யப்பட்டு கடந்த 10.03.2025 அன்று வலதுபுற குடலிறக்க அறுவை சிகிச்சை செய்தனர். தற்போது நான் நலமாக உள்ளேன். தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருந்தால் பல லட்சம் ரூபாய் செலவாகி இருக்கும். ஆனால் அரசு புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப்பிரிவு தொடங்கப்பட்டதால் முற்றிலும் லவசமாக அறுவை சிகிச்சை எனக்கு மேற்கொள்ளப்பட்டது. தனியார் மருத்துவமனையை மிஞ்சும் அளவிற்கு அனைத்து வசதிகளுடன் இம்மருத்துவமனை இருப்பதுடன் இங்கு பணிபுரியும் டாக்டர்கள் மற்றும் செவிலியர்களும் நல்ல முறையில் கவனித்து கொண்டார்கள். இன்னும் 2 நாட்களில் வீட்டிற்கு சென்று எனது அன்றாட பணியினை படிப்படியாக தொடங்கலாம் என தெரிவித்துள்ளார்கள். அதிநவீன வசதிகளுடன் எங்களைப்போன்ற அனைவரும் பயன்பெறும் வகையில் இப்படிப்பட்ட உயர்தர மருத்துவமனையினை அமைத்துக்கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

# செஞ்சியில் முதல்வர் மருந்தகத்தின் செயல்பாடு குறித்து ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆய்வு




**செஞ்சி, மார்ச் 16-**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றிம் அப்பம்பட்டு, செஞ்சி பேரூராட்சியில் உட்பட்ட செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது பொதுமக்களிடம், முதல்வர் மருந்தகத்தின் பயன்கள் மற்றும் தேவைப்படும் பிற மருந்துகள் குறித்து கேட்டறிந்தார். உடன் விழுப்புரம் சரக துணைப்பதிவாளர் சிவப்பழனி, கூட்டுறவு சார்பதிவாளர் கண்ணன், செஞ்சி வருவாய் வட்டாட்சியர் ஏழுமலை, துறை அதிகாரிகள் மற்றும் உட்பட பலர் உள்ளனர்.

# இலவச பொது மருத்துவ முகாம்



**ராமநாதபுரம், மார்ச் 16-**

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த மண்டபம் பேரூராட்சிதிருமணமாவில் அக்வா அக்ரி மற்றும் ஹெல் பேஜ் இந்தியா நடமாடும் மருத்துவ சேவை சார்பில் மாபெரும் இலவச எழும்பியல் மற்றும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. இம் முகாமில் ஹெல்பேஜ் இந்தியா சமூக பாதுகாப்பு அலுவலர் வெங்கடேஷ் வரவேற்புரை வழங்கினார். மண்டபம் பேரூராட்சி தலைவர் டி ராஜா குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். எழும்பியல் நல மருத்துவர் டாக்டர் கண்ணன், டாக்டர் அழகுவேல் மணி, அக்வா அக்ரி நிறுவனம் (மண்டபம்) மேலாளர் டி. செந்தில்ராஜா, மண்டபம் பேரூராட்சி கவுன்சிலர்கள் முபாரக், வாசிம் அக்ரம், முகம்மது மீரா சாஹிப், ஜன்னத் சகிலா, ஹெல்ப் ஏஜ்இந்தியா பணியாளர்கள் ஆரோக்கியராஜ், உமாராணி, சிதா லட்சுமி மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் ஹெல்பேஜ் இந்தியா நிறுவன மேலாளர் கார்த்திக் ராஜா நன்றி தெரிவித்தார். இம்முகாமில் இலவசமாக எலும்பு அடர்த்தி பரிசோதனை, ரத்த அளவு பரிசோதனை ஆகிய நோய்களுக்காக இலவச ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மருந்து மற்றும் மாத்திரைகள் இலவசமாக வழங்கினர். ஏற்பாடுகளை அக்ரி அக்வா மற்றும் ஹெல்பேஜ்இந்தியா அலுவலர்கள் செய்திருந்தனர். மண்டபத்தை சுற்றி சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீடு கட்டும் பணியை ஆட்சியர் ஆய்வு


**நாமக்கல், மார்ச் 16-**

நாமக்கல் மாவட்டம், பெரியப்பட்டி மற்றும் வள்ளிபுரத்தில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீடு கட்டும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் உமா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

2023 – 2024 ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானிய கோரிக்கையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 1000 பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் தற்போது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 500 நரிக்குறவர் குடும்பங்கள் என மொத்தம் 1500 குடும்பங்களுக்கு ரூ.45 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டித்தரப்படும் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அறிவித்தார்.

அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் கொல்லிமலைப்பகுதியில் 30 வீடுகளும், தரைப்பகுதியில் 49 வீடுகளும் எனமொத்தம் 79 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தரைப்பகுதியில் நரிக்குறவர் காலணியில் 28 வீடுகளும், பெரியப்பட்டியில் 17 வீடுகளும், வள்ளிப்புரத்தில் 11 வீடுகளும், மங்களபுரத்தில் 15 வீடுகள் என மொத்தம் 49 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தரைப்பகுதிக்கு மதிப்பீடு ரூ.5.07 லட்சத்திலும், மலைப்பகுதிக்கு மதிப்பீடு ரூ.5.72 லட்சத்திலும் வீடுகள் கட்டப்பட்டுவருகிறது. ஒவ்வொரு வீடும் 269 சதுர பரப்பளவில்





கட்டித்தரப்படுகிறது. தார்சு கட்டடம் கட்டப்படும்போது ஒரு முகப்பு அறை, படுக்க அறை, சமையலறை மற்றும் குளியலறை கழிவறை வசதியுடன் மற்றும் சிட் அவுட்டுடன் கட்டப்பட்டு வருகிறது. பையோ செப்டிக்டேங்க் வசதி செய்யப்படுகிறது. மின் வசதியுடன் மின் சாதனங்கள் பல்பு மற்றும் மின் விசிறி வசதிகள் அமைக்கப்படுகின்றன.

கட்டுமான பணிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் உமா ஒப்பந்த காலத்திற்குள் பணிகளை முடித்து பயன்பாட்டிற்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அங்கன்வாடி மையத்தில் ஆட்சியர் ஆய்வு



கடலூர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணிசப்பாக்கம் ஊராட்சி சித்திரைச்சாவடி அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் மற்றும் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# நலத்திட்ட உதவிகள் வழங்கல்



தூத்துக்குடி மாவட்டம், கீழத்தட்டப்பாறை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் 143 பயனாளிகளுக்கு ரூ.77,41,331 மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் வழங்கினார்.

# புதுக்கோட்டையில் திரைப்பட நடிகர் பரதனுக்கு ரசிகர்கள் வரவேற்பு

**புதுக்கோட்டை, மார்ச் 16–**

புதுக்கோட்டையில் ஸிக்ஷி பரதன் நடித்த கொஞ்சம் காதல் கொஞ்சம் மோதல்" திரைப்படம் புதுகை விஜய் திரையரங்கில் வெளியானது. இதனால் ஸிக்ஷி பரதன் ரசிகர்கள் பேனர், டோல் டிரம்செட், வைத்து கொண்டாடினர். அப்போது திரைப்பட நடிகர் ஸிக்ஷி பரதன் திரை அரங்கிற்கு வருவதாக தகவல் வெளியானது.

இதனால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரையங்கில் இருந்து வெளிவந்து, பட்டாசு வைத்தும், டோல் செட் அடித்தும், உதிரி பூக்களை தூவியும், மாலை அணிவித்து மிகப்பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். இதனால் இப்பகுதியில் சற்று நேரம் பரபரப்பாக இருந்தது.




நூற்றுக்கணக்கான இளைஞர்களை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் சிறப்பாக வழி நடத்தியது. தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்கத்தின் மாவட்ட தலைவர் திருக்கட்டளை பாலா தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநில இளைஞரணி துணை தலைவர் வடகாடு அருள், மத்திய மாவட்ட செயலாளர் திருவரங்குளம் வீரமணி, கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையார்கோவில் ஆத்மநாதன், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் ஆலங்குடி சிங்கை கி.சங்கர், தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் கொண்றை கலைவாணன் மற்றும் தமுமுச நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

# அங்கன்வாடி மையத்தை ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கந்தனேரி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூபாய் 16.55 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# புதுக்கோட்டையில் உலக சிறுநீரக தினவிழா



**புதுக்கோட்டை, மார்ச் 16–**

புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை டீம் பெஷாலிட்டி மருத்துவமனையில் உலக சிறு நீரக தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பொதுமக்களுக்கு சிறுநீரக பாதுகாப்பு பற்றியும், பாதிப்பு பற்றியும் விழிப் புணர்வு கொடுக்கப்பட்டது. மருத்து வமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர்.கே.எம்.சலீம் தலைமையில் சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுனர் டி.ராஜராஜன், டாக்டர். எஸ். அஹமத்மர், மர்சூக், டாக்டர்கள் வெங்கட்ராமன், கோகுல் பிரசாத் மற்றும் செவிலியர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் மேலாளர் ஜோசப் நன்றி தெரிவித்தார்.

# கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி




**புதுக்கோட்டை, மார்ச் 16–**

சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கிரிக்கெட் சங்கம் இணைந்து நடத்திய கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. சென்னை சூப்பர் கிங்ஸ் சிணிளி காசி விஸ்வநாதன் ஏற்பாட்டின்பேரில் புதுக்கோட்டை திருவரங்குளம் புஷ்கரம் வேளான் கல்லூரியில் கடந்த 5 நாட்களாக சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கிரிக்கெட் சங்கம் இணைந்து நடத்திய கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 8 கல்லூரியின் மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர். கடந்த 5 நாட்களாக நடைபெற்ற போட்டியினை தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெற்றது. இலுப்பூர் மதர் தெரசா உடற்கல்வி கல்லூரி மாணவர்கள் மாவட்ட அளவில் முதலிடத்தையும், சிவபுரம் யியி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் 2வது இடத்தையும், சண்முகநாதன் பொறியியல் கல்லூரி 3வது இடத்தையும் பிடித்தது. வெற்றிபெற்ற மூன்று அணியினருக்கும் வெற்றி கோப்பையுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர் வழங்கிய பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள கிரிக்கெட் உபகரணங்கள் உள்ள கிட் வழங்கப்பட்டது. பரிசளிப்பு விழாவில் அண்ணா பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி பிரிவின் உதவி இயக்குனர் ரமேஷ் புஷ்கரம், கல்லூரியின் மேனேஜர் நெப்போலியன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணியினருக்கு பரிசுகளை வழங்கினர். மேலும் புதுக்கோட்டை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் கனகராஜ், இணை செயலாளர் பரமன் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை விரிவாக செய்திருந்தனர்.

தினமும் மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

# திருவெண்ணெய்நல்லூர் அரசு பள்ளியில் அறிவியல் கண்காட்சி



**திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 16–**

விழுப்புரம் மாவட்டம் திருவெண் ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழக அரசின் எண்ணும் எழுத்தும் திட்டத்தின் படி அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கிருஷ்ணராஜ் தலைமையில், கல்வியாளர் சுந்தரம் முன்னிலையில் திறந்து வைக்கப் பட்டது. பள்ளி தலைமை ஆசிரியர் ரவி அனைவரையும் வரவேற்றார். இதையொட்டி 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு இசை நாற்காலி போட்டிகள் நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திமுக இளைஞரணி சார்பில் இந்தி எதிர்ப்பு பொதுக்கூட்டம்





**புதுக்கோட்டை, மார்ச் 16–**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றதொகுதிக்குட்பட்ட கீரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ மெய்யநாதன் தலைமையில் திமுக இளைஞரணி சார்பில் இந்தி திணிப்பு, தொகுதி மறு வரையறை, தமிழ்நாட்டிற்கான நிதி பகிர்வில் அநீதி இழைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திமுக சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் தலைமைக் கழக பேச்சாளர் சே.கார்த்திக் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர் கே.எஸ். ரவி, கே.பி.கேடி.தங்கமணி, அருண் வடிவேல், நகரச் செயலாளர் சிவகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி





**திருப்பத்தூர், மார்ச் 16–**

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஒன்றியம் கைலாசகிரி ஊராட்சி பனங்காட்டூர் பள்ளிவாசலில் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை கலில்பாஷா, மமக மாநில செயற்குழு உறுப்பினர் தலைமை தாங்கினார். ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக தமுமுக மாவட்ட தலைவர் நசீர்அஹமத், பேராசிரியர் ஜமாலுதீன், திமுக ஒன்றிய செயலாளர் சீனிவாசன், கைலாசகிரி ஊராட்சி மன்ற தலைவர் சி.ரமணி, ராஜசேகர் துணைத் தலைவர் அரவிந்தன் ,ஊராட்சி மன்ற உறுப்பினர் பைரோஸ் மற்றும் முக்கிய பிரமுகர்கள், ஊர் பொதுமக்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# 20 குழந்தைகளுக்கு காசோலை வழங்கிய ஆட்சியர்



**தென்காசிட மார்ச் 16–**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் இரண்டாம்கட்டமாகதேர்ந்தெடுக்கப்பட்ட 20 குழந்தைகளுக்கு கூட்டாண்மை சமூகப்பொறுப்பு (சிஷிஸி) நிதியிலிருந்து காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வழங்கினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,தென்காசி மாவட்டத்தில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நிதி ஆதரவாளர்களாகிய ரவிச்சந்திரன், வைரவன், முரளி எண்டர்பிரைசஸ், ஹட்சன் அக்ரோ தயாரிப்பு லிமிடெட், நியூ பாய்ஸ் ஸ்போர்ட் கிளப், கடையநல்லூர் தங்கம், வெள்ளி வியாபாரிகள் நலச்சங்கம் ஆகியோர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் நன்றி கடிதம் வழங்கப்பட்டது.

மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டுமென குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள்துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர், கவிதா, மாவட்ட நிதி ஆதரவு திட்ட ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய உதவி ஆணையர் (கலால்), ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்கு), வனிதா, தொழிலாளர் உதவி ஆணையர், திருவள்ளுவன், உதவி செயற்பொறியாளர் (தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்)நெல்லைமதி, உதவி இயக்குநர் (புவியியல் மற்றும் சுரங்கத்துறை), ரமேஷ், இணை இயக்குநர் (பொது மேலாளர்) மாவட்ட தொழில் மையம் திருமதி.மாரியம்மாள், நிதி ஆதரவு மற்றும் வளர்ப்பு பராமரிப்பு ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய இளைஞர் நீதிக்குழும உறுப்பினர் கிருபாவதி எலிசபெத், குழந்தை நலக்குழு உறுப்பினர், ராம்ஹரி, நிதி ஆதரவாளர்கள், குழந்தைகள் மற்றும் குழந்தைகள் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் கற்றல் திறன் குறித்து ஆட்சியர் ஆய்வு



கடலூர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கட்டமுத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற வகுப்பில் மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு செய்தார்.

# புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டியை ஆட்சியர் ஆய்வு





வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா பேரூராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 2.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டியை மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# வருமுன் காப்போம் திட்ட இலவச மருத்துவ முகாம்



திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் கூத்தம்பாளையம் பிரிவு அண்ணா நகர் பகுதியில் உள்ள முருகு மெட்ரிகுலேசன் பள்ளியில் நடைபெறும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட இலவச சிறப்பு மருத்துவ முகாமை துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்கள்.

# செம்மார் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட சுகாதார நிலையம் பூட்டி கிடக்கும் அவலம்

**திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 16–**

திருவெண்ணெய் நல்லூர் அருகே செம்மார் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படாமல் கால்நடைகள் மற்றும் மனிதர்கள் மலம் கழிக்கும் கூடாரமாக மாறும் அவலம் உள்ளது. நடவடிக்கை எடுக்க கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது செம்மார் கிராமம். இங்கு 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று இந்த கிராம




மக்கள் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இதை அடுத்து ரூ.1கோடியே 20 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு கட்டுமான பணிகள் நிறைவடைந்து திறப்பு விழாவிற்காக காத்திருந்தது. இதையடுத்து கட்டுமான பணிகள் நிறைவடைந்து ஓராண்டு காலம் ஆகியும், ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படாமல் பூட்டியே கிடக்கிறது. இதனால் கிராம மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். மேலும் கால்நடைகள் மற்றும் மனிதர்கள் மலம் கழிக்கும் கூடாரமாக மாறியுள்ளது. எனவே மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு செம்மார் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வைஸ்யா கல்லூரியில் நுகர்வோர் தின விழா



சேலம், மார்ச் 16–

சேலம் வைஸ்யா கல்லூரியின் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் மற்றும் மக்கள் உரிமைகள் புலனாய்வு கமிட்டியும் இணைந்து வைஸ்யா கல்லூரி வளாகத்தில் நுகர்வோர் விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் பேச்சுப் போட்டியை நடத்தியது. கலப்படம், போலி விளம்பரம், முறையற்ற வணிகம் மற்றும் 2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களும் அதன் பயன்களும் என்னும் தலைப்பில் மாணவர்களிடையே பேச்சுப்போட்டி நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வாழப்பாடி வட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ரேவதி பரிசு வழங்கி பாராட்டினார். முன்னதாக தமிழ்நாடு நுகர்வோர் மன்ற தலைவர் செல்வம் தலைமையுரை ஆற்றும்போது, குடிமக்கள் முதல் குடியரசுத் தலைவர் வரை காசு கொடுத்து பொருளை வாங்கும் அனைவரும் நுகர்வோர் தான் என்று கூறி பல்வேறு நுகர்வோர் சட்டங்களைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். முன்னிலை வகித்த வைஸ்யா கல்லூரியின் முதல்வர் முனைவர் வெங்கடேசன் பேசும்போது, மாணவர்கள் அனைவரும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை அறிந்து கொண்டு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றார். வணிகவியல் துறைத்தலைவர் கந்தசாமி சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றார். மேலும் இக்கருத்தரங்கில் மாவட்ட பொறுப்பாளர்கள் சௌந்தர்ராஜன், தனபால், அன்பு ரோஸ், கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று இருந்தனர்.

இந்நிகழ்வில் நிறைவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தீபா நன்றி கூறினார். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை தமிழ் மற்றும் வணிகவியல் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம்



சேலம், மார்ச் 16–

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசால் ஊரகப் பகுதிகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய வளர்ச்சித்திட்டங்கள் அனைத்தும் ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களுக்கு முழுமையாகவும், விரைவாகவும் கொண்டு சேர்த்திட மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்றையதினம் நடத்தப்பட்டது.

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு வருவது குறித்தும், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் சீரமைக்கும் பணிகள் குறித்தும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீடுகள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டுள்ள வீடுகள் குறித்தும், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் புதிய வகுப்பறைக் கட்டடப் பணிகள் குறித்தும், தூய்மை இந்தியா திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் போன்ற திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக, கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 580 வீடுகளும், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 429 வீடுகளும், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 379 வீடுகளும், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 335 வீடுகளும், தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்கு 279 வீடுகளும், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 190 வீடுகள் என மொத்தமுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 3,500 வீடுகள் கட்டுவதற்கு 2024–25ஆம் நிதி ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட அனைத்துப்பணிகளும் முடிவடையும் நிலையில் உள்ளது.

மேலும், பழங்குடியினருக்கான வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் 19 வீடுகளும், பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 23 வீடுகளும், கொளத்தூரில் 7 வீடுகளும், அயோத்தியாப் பட்டணத்தில் 4 வீடுகளும், வாழப்பாடி மற்றும் காடையாம்பட்டியில் தலா 1 வீடுகள் என மொத்தம் 55 வீடுகள் கட்டித்தருவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணிகள் அனைத்தும் முடிவுறும் நிலையில் உள்ளது.

மேலும், அனைத்து கிராமங்களும் சமூக பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடர்புடைய அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பணிகளை குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் முடித்திட அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, உதவி திட்ட அலுவலர் (உட்க ட்டமைப்பு) உமா நந்தினி மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் உட்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறப்பு




விழுப்புரம், மார்ச் 16–

இந்தியன் யூனியன் முஸ்லிம்லீக் கட்சி சார்பில் விழுப்புரம் மந்தக்கரையில் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்வு சனிக்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்வுக்கு கட்சியின் மாவட்டத் தலைவர் வி.ஆர்.முகமது இப்ராஹிம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் எஸ்.எம்.அமீர் அப்பாஸ், மாநிலத் துணைச் செயலர்எஸ்.அப்துல் ரஹ்மான், தமுமுக மாநிலச் செயலர் மு.யா. முஸ்தாக்தீன், மாநில வர்த்தக அணிப் பொருளாளர் எஸ்.எம். அப்துல் ஹக்கீம், காணை தலைமை இமாம் ஏ.ஆர். அப்துல் சத்தார் காஷ்பி முன்னிலை வகித்தனர்.

நோன்பு திறப்பு நிகழ்வில் பங்கேற்று அமைச்சர் க.பொன்முடி பேசியது, எல்லோருக்கும் எல்லாம், அனைவரும் சமம் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும். நாம் இங்கு அண்ணன், தம்பிகளாக இருந்து பழகி வருகிறோம். ஆனால், பாஜக அரசு மதத்தின் பெயரில் வெறியைத் தூண்டி மக்களை பிரிக்க நினைக்கிறது. அதை எதிர்த்து முதல்வர் ஸ்டாலின் குரல் கொடுத்து வருகிறார். எல்லோரும் சமம் என்ற அடிப்படையில் தமிழகத்தில் முதல்வர் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். எல்லோரும் படிக்க வேண்டும் என்று நினைப்பதுதிராவிட மாடல் ஆட்சி. சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீட்டை வழங்கியது திமுக ஆட்சிதான். அதுபோல ஹஜ் பயணம் மேற்கொள்ள செல்பவர்கள் ஓய்வெடுப்பதற்காக சென்னையில் மாளிகை கட்டித் தரப்படும் என முதல்வர் அறிவித்திருக்கிறார்.

திராவிடமாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் ஸ்டாலினின் நோக்கங்களை புரிந்து கொள்ள வேண்டும். சிறுபான்மை சமுதாயத்தை அது இஸ்லாமியர்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் இயக்கம் திமுகதான். ஆனால், மதவெறியைத் தூண்டி மக்களைப் பிரிக்க நினைக்கிறது பாஜக அரசு.

இந்துவாக, இஸ்லாமியர்களாக, கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்த மண்ணின் மைந்தர்கள்தான் என்றார். நிகழ்வில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், எம்.எல்.ஏ.க்கள் இரா.லட்சுமணன், சபா.ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ. செ. புஷ்பராஜ், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் துணைத் தலைவர் எம்.டி.குலாம்மொய்தீன், நகர திமுக செயலர் இரா.சக்கரை உள்ளிட்டோர் பேசினர்.

இந்த நிகழ்வில் ஜான்சன், நகர்மன்றத் தலைவர் தமிழ்ச் செல்விபிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, நகர்மன்ற உறுப்பினர் கள் ஆர்.மணவாளன், மணி, இம்ரான், ரியாஸ் அகமது, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் என்.சுப் ரமணியன், தமுமுக மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.அப்பாஸ், நகர திமுக இளைஞரணி அமைப் பாளர் செ.மணிகண்டன், ஜி. சகாயராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவது குறித்து அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம்



சேலம், மார்ச் 16–

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருவது குறித்த ஆய்வுக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டம் முழுவதும் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் தொடர்பான பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டமானது 108.92 அடியாக உள்ளது. இது கோடைகாலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அளவு குடிநீரை வழங்குவதற்கு போதிய அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றையதினம் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளுக்கும் சீரான குடிநீர் கிடைத்திட மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் இன்றையதினம் நடத்தப்பட்டது.

சேலம் மாநகராட்சியானது கொண்டலாம்பட்டி, அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி மற்றும் சூரமங்கலம் ஆகிய 4 மண்டலங்களில் 60 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இதில் தோராயமாக 2024 கணக்குபடி 10.78 லட்சம் மக்கள் தொகையை கொண்டுள்ளது. சேலம் மாநகராட்சிக்கு தற்போதைய மக்கள்தொகை அடிப்படையில் நாள் ஒன்றிற்கு 147 எம்.எல்.டி குடிநீர் தேவைப்படுகிறது. இதனைப் பூர்த்தி செய்யும் வகையில் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் நங்கவள்ளி குடிநீர் திட்டம் மற்றும் சேலம் மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சிப்பகுதிகளில் உள்ள 60 கோட்டங்களில் 57 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் 3 முதல் 6 நாள்களுக்கு ஒருமுறை பாதுகாக்கப்பட்ட சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, குடிநீர் குழாய் உடைப்பு உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணங்களால் குடிநீர் வழங்கிட தாமதம் ஏற்படும் பட்சத்தில் அதனை விரைவில் சீரமைத்து குடிநீர் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, குடிநீர் குழாய்கள் செல்லும் பகுதிகளில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெறும்போது பாதுகாப்பாக குடிநீர் குழாய்களுக்கு பழுது ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ளவும், மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை விரைந்து முடித்திடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கோடை காலங்களில் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் தேவை அதிகரிக்க வாய்ப்புள்ள இடங்கள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அனைத்துப் பகுதிகளிலும் குப்பைகள் தேங்காத வகையில் அவற்றை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டமெனவும், கழிவுநீர் கால்வாய்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதேபோன்று, சாலைகள், தெருவிளக்குகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, குடிநீர் பிரச்சனை வராதவாறு செயல்பட வேண்டுமென மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக 0427 2212844 என்ற எண்ணில் பொதுமக்கள் புகார்களைத் தெரிவிக்கலாம். குடிநீர் தொடர்பான புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் அதன்மீது தொடர்புடைய துறை அலுவலர்கள் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.

மேலும், சேலம் மாநகராட்சிக்கென தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்த அறிவிப்புகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்தும், மாநகராட்சியில் உள்ள போடிநாயக்கன்பட்டி ஏரி, அல்லிக்குட்டை ஏரி மற்றும் மூக்கனேரி ஆகிய நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகள் குறித்தும், தூய்மை பாரத இயக்கம் 2.0, பள்ளிகள் மேம்பாட்டு நிதி, 15வது நிதிக்குழு மானியத்திட்டம், நமக்கு நாமே திட்டம், தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம், அம்ருத் 2.0, சாலைப் பணிகள் உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக இன்றையதினம் காலை அஸ்தம்பட்டியில் உள்ள நீரேற்று நிலையத்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளப் பட்டு, பொதுமக்களுக்கு எத்தனை நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்படுகிறது என்பது குறித்தும், வழங்கப்பட்டுவரும் குடிநீரின் அளவு குறித்தும், மேல்நிலை குடிநீர் தொட்டிகள் குறிப்பிட்ட நாட்கள் இடைவெளியில் மேற்கொண்டார்கள். கிளோரினேசன் செய்யப்படுவது குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாநகரப் பொறியாளர் (பொ) செந்தில்குமார், மாநகர் நல அலுவலர் முரளி மற்றும் மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

# பட்டியலின மக்கள் இயக்கம் சார்பில் பத்மஸ்ரீ விருதாளருக்கு பாராட்டு சபாநாயகர், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் பங்கேற்பு






புதுச்சேரி, மார்ச் 16-

புதுச்சேரி மாநில அனைத்து பட்டியலின மக்கள் இயக்கம் சார்பில் பத்மஸ்ரீ விருதாளர் தவில் இசை வித்வான் டாக்டர் தட்சிணாமூர்த்திக்கு புதுச்சேரி தனியார் ஓட்டலில் பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மற்றும் சபாநாயகர் செல்வம், உள்துறை அமைச்சர் ஆ. நமச்சிவாயம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தவில் இசை வித்துவானுக்கு பொன்னாடை மற்றும் பூங்கொத்து வழங்கி பாராட்டி வாழ்த்தினர். நிகழ்ச்சியில் அமைச்சர் சாய் ஜெ.சரவணன் குமார், எம்.எல்.ஏ.,க்கள் கல்யாணசுந்தரம், வி.பி.ராமலிங்கம், சிவசங்கர், பட்டியலின மக்கள் இயக்க தலைவர் தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர், அந்த இசைக்குழுவில் ஓம் நமச்சிவாயம் என்ற பாடல் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

## கண்ணாடி இழை தரைத்தள பாலம் அழகுப்படுத்தும் பணியை ஆட்சியர் ஆய்வு



கன்னியாகுமரி, மார்ச் 16-

கன்னியாகுமரி மாவட்ட நெடுஞ்சாலைத்துறை சார்பில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து கூறியதாவது,

முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் சீரிய முயற்சியில் கன்னியாகுமரி கடற்பாறையில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையின் 25ம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டத்தினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் விவேகானந்தர் பாறை முதல் அய்யன் திருவள்ளுவர் சிலையினை இணைத்து சுற்றுலாப் பயணிகள் அய்யன் திருவள்ளுவர் சிலையினை கண்டு களித்திட ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி இழை தரைத்தளம் பாலம் அமைத்து, கடந்த 30.12.2024 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் சிலை நிறுவி 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

மேலும் கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை தமிழ்நாடு முதலமைச்ச திறந்து வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினை ஆர்வத்துடன் பார்வையிடுவதோடு, கண்ணாடி இழை தரைத்தள பாலம் வாயிலாக நடந்து சென்று கடலின் அழகினை கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

குறிப்பாக பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆய்வு மேற்கொண்டு, சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் தமிழ் கலாச்சாரங்களை பறைசாற்றும் வகையில் கண்ணாடி இழைப்பாலத்தில் அழகுப்படுத்த துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதன் அடிப்படையில் தற்போது கண்ணாடி இழைப்பாலத்தில் நடைபெற்று வரும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் படி கண்ணாடி இழைதரைத்தள பாலம் உலகளவில் மேம்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னதாக கண்ணாடி தரைத்தளபாலத்தில் நடைபெற்று வரும் சிற்பங்கள் அமைக்கும் பணி, அலங்கார மின்விளக்குகள் அமைக்கும் பணி, திருவள்ளுவர் சிலையினை மேம்படுத்தும் பணிகள் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை விரைந்து முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற ஆய்வில் நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் சத்திய மூர்த்தி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் உலக சிறுநீரக தின விழிப்புணர்வு நிகழ்வு

சேலம், மார்ச் 16-

உலக சிறுநீரக தினமானது ஆண்டுதோறும் சிறுநீரக பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கிலும் அதனை சார்ந்த நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட விம்ஸ்வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் ரத்த சுத்திகரிப்பு பிரிவின் மூலம் விழிப்புணர்வு சின்னம் வடிவமைக்கப்பட்டு திறப்பு விழா நிகழ்வானது பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின் படி கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.



நிகழ்ச்சிக்கு துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில் குமார் முன்னிலை வகித்தார். துறையின் ரத்த சுத்திகரிப்பு பிரிவை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் ஒன்றினைந்து கல்லூரி வளாகத்தில் சிறுநீரக வடிவமைப்பினை விழிப்புணர்வு சின்னமாக கல்லூரி வளாகத்தில் வடிவமைத்திருந்தனர். இதனை துறையின் டீன் திறந்து வைத்தார். மேலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்லூரி வளாகத்தில் சிறுநீரகம் சின்னம் வரையப்பட்டு அதில் துறை மாணவர்கள் நின்று சிறுநீரகத்தின் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து விழிப் புணர்வை ஏற்படுத்தினர். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் ரத்த சுத்திகரிப்பு பிரிவு உதவி பேராசிரியர்கள் மகேஸ்வரன் மற்றும் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

## அரியாங்குப்பம் ஐயப்பன் கோயிலில் பங்குனி மாதம் 1ம் தேதியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம்-500 பேருக்கு அன்னதானம்

புதுச்சேரி, மார்ச் 16-

புதுவை அருகே அரியாங் குப்பத்தில் உள்ள ஐயப்பன் கோயிலில் இன்று பங்குனி மாதம் 1ம் தேதியை முன் னிட்டு ஐயப்பனுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. பின்னர் சுவாமிக்கு சிறப்பு தீபாரா தனை நடந்தது. தொடர்ந்து சுமார் 500 பேருக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. இதில் அரியாங்குப்பம் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற் கான அனைத்து ஏற்பாடு களையும் கோயில் உபயதார ரும், முன்னாள் காவல்துறை எஸ்பி ஆறு முகம் மற்றும் குடும்பத்தினர், ஐயப்பன் கோயில் நிர்வாகி கள், கோயில் அறங்காவல் குழுவி னர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



# தென்காசியில் திட்ட பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

தென்காசி, மார்ச் 16-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் அரசு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து, மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் ஞ்மிஷிபிகி குழு தலைவருமான ராணிஸ்ரீ குமார் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் முன்னிலையில் நடைபெற்றது.



இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தேசிய சுகாதார திட்டம், தீன தயாள் உபாத்தியாய கிராம மின்வசதி திட்டம், பிரதமமந்திரி வீட்டு வசதி திட்டம், தூய்மைபாரத இயக்கம், தேசிய ஊரக குடிநீர் திட்டம், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை திட்டம், தேசிய சமூக உதவித்திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள், தேசிய நில ஆவணங்கள் கணினி மயமாக்கல் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், தேசிய நெடுஞ்சாலை திட்டம், தேசிய மின் ஆளுமைத் திட்டம், மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்ட தொழில் மையம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம், ஷியாமபிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம், ஜல் ஜீவன் மிஷன், வேளாண்மைத்துறை, வனத்துறை, மருத்துவத்துறை, பிரதம மந்திரி கிராம முன்னேற்ற திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலன் கருதி விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். மேலும், மக்களின் தேவைகளை அறிந்து அவர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும். அனைத்தும் சிறந்த முறையில் செயல்படுத்தி பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடையும் விதத்தில் அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் ஞ்மிஷிபிகி குழு தலைவருமான ராணிஸ்ரீகுமார் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித்துறை) ஏழிசைச் செல்வி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
● ஞயிறு ● மார்ச் 16, 2025

# மாசி மகம் தீர்த்தவாரிக்கு வந்த பக்தர்களுக்கு சர்பத் வழங்கல்



புதுவை மாசி மகம் தீர்த்தவாரிக்கு வந்த பக்தர்களுக்கு லே ஜெயமணி சைக்கிள் விற்பனையகம் ஏற்பாட்டில் நன்னாரி சர்பத் வழங்கப்பட்டது.

# முதல்வர் மருந்தகத்தில் ஆட்சியர் ஆய்வு



கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டத்திற்குட்பட்ட எல்.என்.புரம் பகுதியில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு செய்தார்.

# பல்வேறு திட்டப்பணிகள் குறித்து கடலூர் ஆட்சியர் ஆய்வு



**கடலூர், மார்ச் 16-**

கடலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக பண்ருட்டி வட்டத்திற்குட்பட்ட எல்.என்.புரம் பகுதியில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணிசப்பாக்கம் ஊராட்சி சித்திரைச்சாவடி அங்கன்வாடி மையத்தில் தினசரி குழந்தைகள் வருகை பதிவேடு, எடை மற்றும் ஊட்டச்சத்து விகிதம் குறித்து பராமரிக்கப்படும் பதிவேடுகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து, அங்கன்வாடி மைய பணியாளர்கள் குழந்தைகள் பராமரிப்பில் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சித்திரைச்சாவடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 4 ஆம் மற்றும் 5 ஆம் வகுப்பில் தமிழ் மற்றும் கணித பாடத்தில் மாணவர்களின் கற்றல்திறன் குறித்தும், மேலும் அப்பள்ளி வளாக சுற்றுச்சுவர் அமைக்கப் பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கப்பட்ட கணிசப்பாக்கம் ஊராட்சி அங்கன்வாடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அதன் அருகில் பழுதுநீக்கப்பட்ட நூலக கட்டிடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. கணிசப்பாக்கம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நர்சரி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

கட்டமுத் துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு குழந்தை நேய பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தில் கூடுதலாக இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டுவருவதையும், கட்டமுத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளி கட்டடம் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

கட்டமுத் துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற வகுப்பில் மாணவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு செய்ததோடு, அரசு துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கற்றல் திறன் குறைவாக உள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திடும் வகையில் சிறப்பு கவனம் செலுத்த நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியரிடம் அவ்வாறு தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது என தெரிவித்தார்.

ஆய்வின்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், மோகனா, உதவிபொறியாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# முதல்வருடன் உயர் நீதிமன்ற நீதிபதி சந்திப்பு



சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதியரசி கோவிந்தராஜன் திலகவதி முதலமைச்சர் ரங்கசாமியை சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்தார். அப்போது, புதுச்சேரியில் பிணக்கு தீர்வு நடுவர் மையம் (Orbitation Centre) அமைப்பதற்கான கட்டிடம் மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். உரிய நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் உறுதி அளித்தார். அப்போது சட்டத்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன், சட்டத்துறை செயலர் சத்தியமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

# மாசி மக தீர்த்தவாரி திருவிழாவில் பங்கேற்ற பக்தர்களுக்கு அன்னதானம்



**புதுச்சேரி, மார்ச் 16-**

மாசி மகத்தை முன்னிட்டு புதுவை குறிச்சிகுப்பம் கடற்கரைப் பகுதியில் புதுச்சேரி மற்றும் தமிழக பகுதியில் இருந்து தீர்த்தவாரிக்கு பங்கேற்க வரும் சாமிகள் கடற்கரை ஓரம் பந்தல் அமைக்கப்பட்டு சாமிகள் அணிவித்து நிற்கும் இதை காண்பதற்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தவாரியில் பங்கேற்கும் சாமிகளை பார்ப்பதற்கு புதுச்சேரி நோக்கி படையெடுத்து வந்தனர். அப்படி வரும் பக்தர்களுக்கு பல்வேறு கட்சிகள் அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனங்கள் சார்பில் ஆங்காங்கே அன்னதானம், நீர் மோர் பந்தல் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக தீர்த்தவாரியில் பங்கு பெற்ற பக்தர்களுக்கு புதுச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தியாகி தங்கவேல் குடும்பத்தார் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பரமேஸ்வரி கிளேமான்சோ, ஜீவாநந்தம், கிளேமான்சோ, வாஞ்சிநாதன் கிளேமான் சோ, பாரதி கிளேமான் சோ, தமிழ்செல்வி கிளேமான்சோ உள்ளிட்டோர் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதான வழங்கினர்.

# தேசிய கோகோ போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு அமைச்சர் நமச்சிவாயம் நிதியுதவி



புதுச்சேரி மாநிலம் முழுவதும் உள்ள கோகோ விளையாட்டு வீரர்கள் மார்ச் மாதம் 31ம் தேதி ஒடிசா மாநிலத்தில் தேசிய அளவில் நடைபெற உள்ள போட்டியில் புதுச்சேரியில் இருந்து சுமார் 15 விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கின்றனர். இந்நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சர் நமச்சிவாயம், விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்கி வாழ்த்தினார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007